
# 14 தற்காலக் கவிதைகள்

சி. வி. என அழைக்கப்படும் சி.வி. வேலுப்பிள்ளை ஒரு நாடறிந்த இலக்கிய கர்த்தா ஆவார். ஆங்கில எழுத்துக்களினூடாக மலையக மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியவர். தொடர்ந்து தமிழிலக்கியத்தில் தடம் பதித்தவர்.

## 01. தேயிலைத் தோட்டத்திலே

புழுதிப் படுக்கையில்
    புதைந்த எம் மக்களைப்
    போற்றும் இரங்கற்
    புகழ் மொழி இல்லை;
பழுதிலா அவர்க் கோர்
    கல்லறை இல்லை
    பரிந்தவர் நினைவுநாள்
    பகருவார் இல்லை



ஊணையும் உடலையும்
ஊட்டி இம் மண்ணை
உயிர்த்த வர்க்(கு) இங்கே
உளங்கசிந் தன்பும்
பூணுவாரில்லை - அப்
புதைமேட்டிலோர் - கானகப்
பூவைப் பறித்துப்
போடுவாரில்லையே.

ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும்
ஏறி மிதித்து
இங்கெவர் வாழவோ
தன்னுயிர் தருவன்.

என்னே மனிதர்
இவரே இறந்தார்க்கு
இங்கோர் கல்லறை
எடுத்திலர்! வெட்கம்
தன்னை மறைக்கத்
தானோ அவ்விறைவனும்
தளிர் பசும் புல்லால்
தரை மறைத்தனனோ!

***சி.வி. வேலுப்பிள்ளை***
***தமிழில் : சக்தீ அ. பால - ஐயா***

◆ *அரும்பதங்கள்*

*பரிந்தவர்* - *இறந்தவர்*
*பகருவார்* - *கூறுவார்*
*பூணுவார்* - *அன்பு கொள்பவர்*
*கானகப் பூ* - *காட்டுப் பூ*

## 02. குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்

மாமரத்தின் கிளைகளிலே மந்தியினந் தாவி
மாங்கனிகள் பறித்துண்டு மகிழ்ந்துவிளை யாடும்
பூமரத்தின் இலைகளிலே வண்டினங்கள் மோதிப்
புதுமலர்கள் கோதிநறு மதுவருந்தி யாடும்
பாமரத்தின் பாட்டிசைத்துப் பசுங்குயில்கள் கூவிப்
பசுங்கிளிகள் புளகமுறப் பருவஇரை தேடும்
சாமரத்தின் ஒப்பாகச் சிறகடித்துக் கூடிச்
சதுராடும் மயில்களெனைக் கவிபாட வைக்கும்

தென்றலிலே அசைந்தாடும் செந்நெல்வயற் கதிர்கள்
தேனருவி எனவழியும் ஏருழவன் வியர்வை
குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்
குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்
முன்றலிலே மண்ணளைந்து முழங்காலில் தவழ்ந்து
முத்துதிர நகைசெய்யும் சொத்தாகும் மழலை
கன்றினது உடல்நக்கிக் கனைக்கின்ற பசுக்கள்
கரைந்தழைத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்

பனிக்கூட்டம் விரட்டிவரும் பகலவனின் வீரம்
பசிக்கூட்டம் விரட்டிவரும் பண்புமிகு ஈரம்
கனிக்கூட்டம் அசைந்தாடும் கனிமரத்தின் சோலை
கருமுகில்கள் தவழவரும் கார்கால மாலை
தனித்துநின்றும் சத்தியத்தால் தலைநிமிரும் மனிதன்
தற்பெருமை கொள்ளாது தலைதாழும் அறிஞன்
இனித்தாலும் கசந்தாலும் இன்முகத்தைக் காட்டும்
இல்லாளின் இயற்கையெழில் என்மனதை வெல்லும்

குஞ்சிருக்கும் கூட்டினுக்கு இரையெடுத்துச் சென்று
குனிந்தலகால் இரையூட்டும் குருவிகளின் பாசம்
நெஞ்சகத்தை நிறைத்திருக்கும் நிர்மலமாம் வானில்
நிறைமதிதன் துணைவியர்கள் சூழவரும் கோலம்
பஞ்செனவே திரண்டமுகில் பரவுகின்ற வானில்
பரிதியொளி வீசியெழும் பரவசமாம் ஜாலம்
கொஞ்சிமகிழ்ந் தோடிவிளை யாடிவரும் அணில்கள்
கூரைகளில் கூடுகட்டல் கோடியழ கன்றோ

ஓடுகின்ற நீரையெதிர்த் தோடுகின்ற மீன்கள்
ஊருகின்ற சிற்றெறும்பின் ஒழுங்குமுறை வாழ்க்கை
ஆடுகின்ற பூமரங்கள் அசைகின்ற இலைகள்
அதிகாலை எழுந்துஇரை தேடவரும் பறவை
மூடுகின்ற இமைக்கடங்கா முழுநிலவு விழிகள்
முந்தானைச் சேலைகட்டும் செந்தாழம் பூக்கள்
கூடுகின்ற இயற்கையெழில் குதூகலத்தைத் தருமே
குழந்தையென எனதுமனம் குதித்தாடும் தினமே

குதித்தோடி வரும்அருவிக் குளிர்நீரின் சுகமும்
குலைவாழை தலைசாய்த்து குனிந்திருக்கும் அழகும்
சிலிர்த்துடலின் நீரகற்றும் சிறுபறவைச் செயலும்
சிரித்துவிளை யாடிமகிழ் சிறுமழலைத் தமிழும்
செழித்தோங்கி வளர்ந்திருக்கும் செந்நெல்வயல் நிலமும்
செவ்வாம்பல் மலருடுத்த சிற்றமுதக் குளமும்
களித்துமனம் மகிழவைக்கும் கவலைதனைப்போக்கும்
கண்ணிறைத்து என்மனதைக் கவிபாட வைக்கும்

***கவிஞர் அகளங்கன்***

◆ *அரும்பதங்கள்*

*சாமரம்* - *சாமரை*
*ஈர்* - *இரக்கம்*

★ குழந்தையென எனது மனம் குதூகலிக்கும் என்ற கவிதையில் இயற்கை எழில், இலகு தமிழில் வாசகர் மனதில் திரைப்படம் போல் விரிய வைக்கப்பட்டுள்ளது.

★ கவிஞர், தான் வாழும் வன்னி மண்ணில் தரிசிக்கக் கூடிய அழகுக் காட்சிகளில் மூழ்கி திளைத்து தான் பெற்ற அழகுணர்ச்சியை வாசகர்களும் நயந்து அனுபவிக்குமாறு கவிதை உள்ளத்தோடு வெளிப்படுத்தியுள்ளார்.

★ பாமரத்தின் பாட்டிசைக்கு... பாவாகிய மரம் என உருவக அணியாகவும் பாமரம் அதாவது பாமர மக்களுக்கே உரிய தெம்மாங்கு போன்ற இசை வகைகள் எனவும் நயந்து பொருள் கொள்ளுமாறு கவிஞரின் சொல்லாட்சி திறன் அமைந்துள்ளமை நயத்தற்குரியது.

★ இக்கவிதையின் முதலாவது பந்தி முல்லை நிலத்திற்குரிய வாசனை வாசகர்களை அந்நிலத்திற்கே அழைத்துச் செல்லும் பாங்கில் அமைந்துள்ளது.

★ மயில்கள் தோகை விரித்து ஆடுவதை சாமரை வீசுவதற்கு உவமித்துள்ளமை சிறப்பாகும்.

★ இரண்டாவது பந்தி, வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருத நிலத்திற்குரிய இயற்கை எழிலும் அங்கு வாழும் உழவனின் உழைக்குந் திறனும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

★ செந்நெல் வயற் கதிர்கள் தென்றலில் அசைந்தாடுவதற்கு ஏர் உழவனின் உழைப்பே காரணம் என்பதை **தேனருவி என வழியும் ஏர் உழவன் வியர்வை..** என கவிஞர் நுட்பமாகவும் அழகுணர்ச்சியுடனும் வெளிப்படுத்தியிருக்கும் திறன் நயத்தற்குரியது.

★ உழவன் உழைப்பால் உரம் பெற்றவன் என்பதனை ‘குன்றெனவே நிமிர்ந்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்’ அவன், தான் உழைத்து உண்பதோடு மட்டுமல்லாது உலகுக்கும் உணவூட்டும் சிறப்புக்குரியவன், மாண்புகழ் மிக்கவன் என்பதனை **குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்** என்று கூறி கௌரவப்படுத்தியுள்ளார்.

★ **முன்றலிலே மண்ணளைந்து, கன்றினது உடல் நக்கி..**
**கரைந்தழைத்து இரையுண்ணும் ...**

ஆகிய தொடர்கள் மருத நிலத்தில் வாழுகின்ற விவசாய பெருங்குடி மக்களின் இயல்பான குடும்பப் பாசம், விருந்தோம்பல் முதலான விழுமிய பண்புகளை வெளிப்படையாகவும் சிறப்பாகவும் வெளிப்படுத்தியுள்ள திறன் கவிதை நயப்பிற்கு களம் அமைத்துக் கொடுக்கிறது.

★ பந்தி ஆறில் குதித்தோடி வரும் அருவிக் குளிர்நீரின் சுகமும்... மருதநில இயற்கை சூழல்அழகுணர்ச்சியோடும்அனுபவஉணர்ச்சியோடும்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்றே சொல்லலாம்.

★ செழித்தோங்கி வளர்ந்திருக்கும் செந்நெல் வயல்நிலமும் என்ற கவிதை அடி உழவர் குடியில் பிறந்த கவிஞரின் பெருமித உணர்ச்சியோடு கூடிய கவிதை உள்ளத்தை வெளிப்படுத்தியுள்ளது இக்கவிதை.

★ கவிஞர் வாழ்ந்த சூழல், அவரது மண்பற்று இயற்கையைக்கண்டு குதூகலிக்கும் குழந்தை உள்ளம் என்பனவே அவரை கவிபாடும் கவிஞன் ஆக்கின என்பதை வெளிப்படுத்துகின்றது.

**கவிஞர் வெளிப்படுத்த விழைந்த விடயம்**

முல்லையும் மருதமும் மயங்கும் வன்னி மண்ணின் இயற்கை எழில் அங்கு வாழும் மக்களின் உழவுத் தொழிலின் மேன்மை முதலிய பண்புகள்.

**அதை வெளிப்படுத்தியுள்ள விதம்**

அங்கு காணப்படும் இயற்கைக் காட்சிகள், உழவர் பற்றிய சித்திரிப்புகள், பறவைகள், விலங்குகளின் செயற்பாட்டினூடாக வெளிப்படுத்தியுள்ளார்.

**இப்பாடல் பகுதியில் இடம்பெற்றுள்ள தொகை நிலைகள்**

| | | | |
|---|---|---|---|
| மாங்கனி | - வேற்றுமைத்தொகை | பூமரம் | - வேற்றுமைத் தொகை |
| பாட்டிசைத்து | - வேற்றுமைத் தொகை | ஏர் உழவன் | - வேற்றுமைத் தொகை |
| குலைவாழை | - வேற்றுமைத்தொகை | பசுங்கிளி | - பண்புத் தொகை |
| பசுங்குயில் | - பண்புத்தொகை | செந்நெல் | - பண்புத்தொகை |
| சிறுமழலை | - பண்புத்தொகை | சிறு பறவை | - பண்புத்தொகை |
| செவ்வாம்பல் | - பண்புத்தொகை | புதுமலர் | - பண்புத்தொகை |

**இவற்றிலுள்ள அணிகள்**

உவமை அணி - சாமரத்தின் ஒப்பாக
தேனருவி என வழியும்
குன்றெனவே நிமிர்ந்தோங்கி

உருவக அணி - பாமரம் - பாவாகிய மரம்

## 03. சீறி ஓடாத வருங்கால மனித நதி

அந்த எழுதத் தெரியாத பையன்
இன்று என்னைச் சந்தித்தான்
பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவமாய்
என் முன்னே நின்றான்

மீசைக்கு விதைதூவி இளமை மழை பெய்ய
பயிர் முளைத்த பருவம்
ஏதோ அலுவலுக்கு வந்திருந்தான்
கையொப்பம் இடு என்றேன்
இடது கையின் பெரு விரலை ஊன்றி
வெட்கிச் சிரித்தான்
அது ஒரு செத்த சிரிப்பு

என் இதயம் கழன்று
அவன் இட்ட
ஒப்பத்தின் மேல் விழுந்து
கத்தியது
பின் கருகிப் பற்றியது

அவன் காதல் உணர்வுகளை என்னென்று ஒருத்திக்கு
எழுதுவான் வருங்காலம்
அழகு முகம்
கீழுதடு இரத்தச் சிவப்பு
பெண் விழுவாள் இவற்றில் மயங்கி
காகம்போல் அவன் விழுந்தவளின் வேலி ஓரமெல்லாம்.

கரைந்து திரிவாவோ
எழுத வருகின்ற உணர்ச்சிகளை
ஒலியாக்கி வந்திருக்கக்கூடாது
அவன் இன்று அலுவலுக்கு
எனக்கு
நிறைய வேலைகள் இருக்கின்ற தினம் இன்று
இனியென்ன
நானில்லை

அந்த எழுதத் தெரியாத வருங்கால மனித நதி
போனாலும் நான்
இருந்தபடி கதிரையிலே
உலகப் பாடசாலை அனைத்தையுமே நினைத்துவிட்டு
எண்ணுகிறேன்
அந்த நதி வரும் நாளில்
சீறி ஒலியெழுப்பி ஓடாது
உறையும் சிறு துளியாய்.

**கவிஞர் சோலைக்கிளி**

★ *சீறி ஓடாத வருங்கால மனித நதி என்ற இக்கவிதையில் எழுத்தறிவின்மையின் அவலம் சுட்டிக் காட்டப்படுகின்றது.*

★ *எழுத்தறிவின்மையால் எதிர்காலத்தில் அவனது முகவரிகள் தொலைந்து போகக் கூடிய அபாயம் சுட்டிக் காட்டப்படுகின்றது.*

★ *எழுதத் தெரியாமையால் உள்ளத்து உணர்வுகளை வெளியிடவும் வகையின்றி போகலாம் என்ற எச்சரிக்கை முன்வைக்கப்படுகின்றது.*

★ *எழுத்தறிவற்ற அவனுக்காக கவலைப்படும் கவிஞரின் மனம் துல்லியப்படுத்தப்பட்டுள்ளது.*

★ *அழகும் இளமையும் இருந்தாலும் எழுத்தறிவற்றதால் அவை கவனிக்கப்படத் தக்கவையல்ல என்பது கவிஞரின் எண்ணம்.*

## வினாக்கள்

### தேயிலைத் தோட்டத்திலே

1. தேயிலைத் தோட்டத்திலே என்ற கவிதையில் கவிஞர் யாரைப் பற்றிப் பாடுகின்றார்?
2. 'பழுதிலா', 'இங்கவர்' ஆகிய சொற்களைப் பிரித்தெழுதுக.
3. இக்கவிதையின் கருப் பொருளையும் அதற்கான துணைக் கருத்துக்களையும் எழுதுக.
4. இக்கவிதையில் உமக்குப் பிடித்த பகுதியைக் குறிப்பிட்டு அதற்கான காரணங்களைத் தருக.
5. கவிதையை வாசித்தபோது உமது மனதில் தோன்றிய உணர்வுகளை எழுதுக.

### குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்

1. பாடல்களில் கூறப்படும் பொருளை கலந்துரையாடி அறிக.
2. பாடல்களை சந்தி பிரித்து எழுதுக.
3. எதுகை, மோனைக்கான உதாரணங்களை பாடல்களில் இருந்து தருக.
4. கவிஞரின் மனதை குதூகலங் கொள்ள வைக்கும் நிகழ்வுகள் எவை?
5. இப்பாடல்களில் காணப்படும் அணிகளை விளக்குக.
6. இக்கவிதை ஏற்படுத்திய மன உணர்வினைத் தருக.

### சீறி ஓடாத வருங்கால மனித நதி

1. சீறி ஓடாத வருங்கால மனித நதி என்ற கவிதையில் ஆசிரியர் கூற விளைந்த முக்கிய விடயம் எது?
2. இக்கவிதையில் எழுதத் தெரியாதவனின் வனப்பை ஆசிரியர் எவ்விதம் காட்டுகிறார்?
3. அது ஒரு செத்த சிரிப்பு என்ற வரிகளால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
4. பையனைப் பற்றிய கவிஞரின் கவலை எவ்விதம் வெளிப்படுகிறது?
5. பையனின் இந்நிலைக்குக் காரணமாக கவிஞர் எதைச் சாடுகிறார்?
6. இக்கவிதையில் பயன்படுத்தப்பட்ட உருவக அணியை எடுத்துக்காட்டி விளக்குக.
7. இக்கவிதையின் மூலம் கற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினை என்ன?
8. இக்கவிதையின் மொழிநடை பற்றி சுருக்கமாகக் கூறுக.